# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜனவரி 29 2023

Weekly E-paper ● January 29, 2023




# தமிழ்நாட்டிலும் வடக்கு வாழ்கிறது!

சுப.வீரபாண்டியன்

## பி.பி.சி ஆவணப்படம் மடியில் கனம் வழியில் பயம்

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## கார்ப்பரேட் வரலாற்றின் மாபெரும் மோசடி

தலையங்கம்

## தமிழ்நாடு வாழ்க...!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜனவரி 29 2023 Weekly E-paper ● January 29, 2023





சனாதனத்தைப் பரப்பிக் கொண்டு சட்ட வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தும் தமிழ்நாடு ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறக் கோரியும், இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், சேதுக் கால்வாய்த் திட்டத்தை மீண்டும் தொடங்கி நிறைவேற்றவும் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்.

நாள்: 28.01.2023, இடம்: அண்ணாசாலை, சிந்தாமணி, திருச்சி.

# “தமிழ்நாட்டிலும் வடக்கு வாழ்கிறது”!

**சுப.வீரபாண்டியன்**

சில நாள்களுக்கு முன்பு திருப்பூரில் நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சி பேரதிர்ச்சியையும், பெருங்கவலையையும் தருகிறது!

வெளிநாடுகளில், வெளி மாநிலங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டதைத் தாண்டி, இன்று தமிழ்நாட்டிலேயே வடவர்களால் தமிழர்கள் தாக்கப்படும் நிலை வந்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக வடநாட்டுக்காரர்கள் தமிழ்நாட்டில் வேலைக்கு வரும்போதே இந்த ஆபத்தை நாம் உணர்ந்திருக்க வேண்டும்.

இன்றைக்கு மிக வெளிப்படையாக இரண்டு இடங்களில் முழுக்க முழுக்க வடநாட்டுக்காரர்களே இருப்பதைப் பார்க்க முடிகிறது. கட்டிடத் தொழிலாளர்களாக எல்லா இடங்களிலும் அவர்களே இருக்கிறார்கள். அதேபோல உணவகங்களில் பணியாளர்கள் அனைவரும் தமிழ் அறியாத வடநாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்னும் நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது!

இதே நிலை இன்னும் பல்வேறு கட்டங்களைத் தாண்டி, தமிழ்நாட்டில் அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்வைச் சிதைக்கும் காலம் வரக்கூடும் என்பதை இப்போதாவது தமிழ்நாடு உணர வேண்டும்.

ஒரே நாடு, ஒரே பண்பாடு என்று தொடங்கி, பாரதிய ஜனதா கட்சி தன் ஆட்சியில் எல்லாவற்றையும் ஒரே வடிவத்திற்கு மாற்ற முயற்சி செய்கிறது. அவற்றுள் ரேஷன் கார்டும் அடங்கும். ரேஷன் கார்டு என்பதைச் சாதாரணமாக நாம் எடுத்துக் கொண்டு விட முடியாது. மிக விரைவில் ரேஷன் கார்டு வைத்திருக்கிறவர்களுக்கு எல்லாம் தமிழ்நாட்டில் வாக்குரிமை உண்டு என்னும் நிலையை கொண்டு வரக்கூடும்! அப்படி ஒரு மாற்றம் வரும்போது தமிழ்நாட்டின் அரசியலை, வடநாட்டில் இருந்து வந்தவர்கள் தீர்மானிக்கக் கூடிய ஆபத்து நிகழும். அதனை உள்நோக்கமாக வைத்துக் கொண்டுதான் இப்படி வடவர்களை இங்கே இறக்குமதி செய்கின்றனரோ என எண்ணத் தோன்றுகிறது!

இனிமேல் எந்த ஒரு தொழிலிலும் மிகக் குறைந்த அளவைத் தாண்டி வடநாட்டினருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படக் கூடாது என்பதிலும், அவர்களுக்கான வாக்குரிமையை அவர்கள் அவர்களின் மாநிலங்களுக்குச் சென்றுதான் பயன்படுத்த வேண்டும் என்பதிலும் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டிய காலகட்டம் இது! இப்போதும் அதைச் செய்யத் தவறினால், இனி எப்போதும் தமிழ்நாட்டை நாம் மீட்க முடியாது! ●

# பி.பி.சி ஆவணப்படம்
## மடியில் கனம் வழியில் பயம்

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

உலகெங்கும் நடக்கும் முக்கிய பிரச்சினைகளின் உண்மைத் தன்மையை மக்களிடம் எடுத்துரைக்கும் வண்ணம் பிபிசி நிறுவனம் அது குறித்து ஆவணப் படங்களை வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் தனது தனிப்பட்ட வளர்ச்சிக்காகவும், அரசியல் லாபத்துக்காகவும், குஜராத் முதலமைச்சராக இருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்து மற்றும் இசுலாமியர்களிடையே திட்டமிட்டுக் கலவரம் உருவாக்கி, பல்லாயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்தது குறித்து “India, The Modi Question' என்ற பெயரில் ஆவணப்படம் தயாரித்து, இரண்டு பகுதிகளாக வெளியிட்டுள்ளது.

முதல் பாகத்தில் குஜராத் கலவரம் நடைபெற்றபோது அது குறித்து இங்கிலாந்து அரசு தகவல்களை திரட்டி, கருத்துப் பரிமாற்றங்கள் செய்த ஆவணங்களில் இருந்து முன்பு வெளியாகாத அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. குஜராத்தின் முதலமைச்சராக மோடி பதவியேற்றது, பா.ஜ.கவில் அவர் பெற்ற பதவிகள் உட்பட அரசியலில் மோடியின் வளர்ச்சி குறித்து ஆராய்கிறது. மேலும் குஜராத்தில் இந்து யாத்ரீகர்களை ஏற்றிச் சென்ற ரயில் கோத்ராவில் திட்டமிட்டு எரிக்கப்பட்டு ஏராளமான இந்துக்கள் கொல்லப்பட்டது முதல் அதைத் தொடர்ந்து நடந்த மதக்கலவரம் வரை மோடியின் நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குகிறது. “இதில் தொடர்புடைய யாருக்கும் தண்டனை விதிக்கப்படாததற்கு மோடியே நேரடிப் பொறுப்பு” என்று இங்கிலாந்து அரசின் அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

இரண்டாம் பாகம் மோடி அரசுக்கும் இந்தியாவில் வாழும் இசுலாமியர்களுக்குமான உறவு குறித்து ஆராய்கிறது. 2017 ஜார்க்கண்ட் படுகொலை, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்புத் தகுதி பறிப்பு, தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC), குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA), 2020 டெல்லி கலவரம் ஆகியவை குறித்து இதில் விளக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறைச் செயலாளர் “இந்த ஆவணப் படம் ஒரு வெறுப்புப் பிரச்சாரப் படம். வெள்ளை இனவெறியுடன் உருவாக்கப்பட்ட படம்”, என்று கண்டித்துள்ளார். 2021 தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் அவசர கால ஷரத்தின் கீழ் இந்த ஆவணப்படத்தை ஒன்றிய மோடி அரசு தடை செய்திருக்கிறது. ஒன்றிய அரசின் வேண்டுகோளை ஏற்று யு டியுப், டிவிட்டர் போன்றவை இது தொடர்பான பதிவுகளை நீக்கி இருக்கின்றன.

ஜே.என்.யு மாணவர்கள் தங்கள் வளாகத்தில் இதைத் திரையிட ஏற்பாடு செய்தபோது அங்கு மின்சாரத்தை அரசு தடை செய்தது. இருப்பினும் அங்கிருந்த மாணவர்களுக்கு ஆவணப்படம் வாட்ஸ் அப் மூலம் அனுப்பப்பட்டு அனைவரும் அதைப் பார்த்தனர். ‘அடிக்க அடிக்கப் பந்து மேலும் எழும்' என்பதைப் போல தடைகளைத் தாண்டியும் இந்த ஆவணப்படம் சமூக வலைத்தளங்களில் காணக் கிடைக்கிறது.

கருத்து சுதந்திரம் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதன் மூலம் இந்திய ஒன்றியத்தில் அறிவிக்கப்படாத அவசர நிலை அமலாகி உள்ளதை அறிய முடிகிறது. மதச்சார்பற்ற நாடான இந்தியாவில் மதத்தின் பெயரால் இனப்படுகொலை நடத்திய மோடி பிரதாராக இருப்பது நாட்டிற்குப் பெருத்த அவமானம். எனவே வர இருக்கிற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சியை அகற்ற அனைவரும் உறுதியேற்போம். ●

# தமிழ்நாடு வாழ்க...!

மதிவாணன்

நாட்டின் 74வது குடியரசு நாள் விழா ஜனவரி 26-இல் நடைபெற்றது. தில்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி சிறப்பு கவனத்தைப் பெற்றது. ஏனெனில் கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாட்டு ஊர்திக்கு இடம் அளிக்கப்படவில்லை. இதனால் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்றிய அரசின் மீது வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டில் நடைபெறும் அலங்கார ஊர்தி அணிவகுப்பிற்கு பண்பாடு மற்றும் சமூக மாற்றங்களின் பெண்களின் பங்களிப்பை அடிப்படையாக கொண்டு தமிழ்நாட்டு ஊர்தி வடிவமைக்கப்பட்டு இருந்தது.

இதில் ஆத்திச்சூடி முதலான செய்யுள்களை வழங்கிய அவ்வையார், விடுதலைப் போராட்ட வீராங்கனை, ஆங்கிலேயரை வென்று தன் நாட்டை மீட்ட வேலுநாச்சியார், சமூக சீர்த்திருத்தவாதிகளாக திராவிடக் கொள்கையில் நெருக்கமாக பயணித்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் மற்றும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஆகியோரும், வேளாண் துறையில் தன் 105 வயதையும் தாண்டி சாதித்த பாப்பம்மாள் மற்றும் பாடகி எம்.எஸ் சுப்புலட்சுமி, பரத நாட்டியக் கலைஞர் பாலசரஸ்வதி ஆகியோரின் உருவங்கள் அலங்கார ஊர்தியில் வடிவமைக்கப்பட்டு இருந்தன.

இந்த ஊர்தியின் பின்புலமாக திராவிடக் கட்டட கலையை விவரிக்கும் வகையில் தஞ்சைப் பெரிய கோயிலின் மாதிரி வடிவமைக்கப்பட்டிருந்தது.

சென்னையில் நடைபெற்ற குடியரசு ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு என்ற கோலம் முதன்மையாக வர, “தமிழ்நாடு வாழ்க” என்ற வாசகம் மேலே இடம் பெற்றிருந்தது. அண்மையில் தமிழ்நாட்டைத் தமிழகம் என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும் என்று ஆளுநர் கூறியதும், தமிழ்நாடு மக்கள் தங்கள் உணர்வுகளை அதற்கு எதிராக வெளிப்படுத்தி இருந்தனர். எங்கள் மாநிலத்திற்கு என்ன பெயர் வைக்கவேண்டும் என்பதை நாங்களே முடிவு செய்யும் சுதந்திரம் வேண்டும் என்று போராடி சங்கரலிங்கனார் தன் இன்னுயிரை நீத்து, நம்மோடு பண்பாட்டில் கலந்திட்ட பெயரான தமிழ்நாடு என்ற பெயரை அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் சூட்டி, மீட்டெடுக்கப்பட்ட நம் உரிமைப் பெயர்தான் தமிழ்நாடு என்று மீண்டும் ஒரு முறை வல்லாதிக்கம் நாடுவோருக்குப் புரிய வைத்தது.

மெட்ராஸ் மாகாணத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யும் நிகழ்ச்சியில், தன் உடல் நலமின்மையையும் பொருட்படுத்தாது வந்து கலந்து கொண்ட நம் அண்ணா குறித்து முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தனது பேச்சில் நெகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தி இருந்தார். அந்த அளவிற்குப் பேசுபொருளாகி, பின் ஆளுநர் மாளிகையே பின்வாங்கி, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க விளக்கம் கொடுக்க முயன்று, அதில் சில பிழையான செய்திகள் இடம்பெற மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் தமிழ்நாடு என்ற சொல் தவிர்க்கப்பட முடியாத, தவிர்க்கப்படக் கூடாத சொல்லாக குடியரசு நாள் நிகழ்வுகளிலும் உலவி வந்தது என்று சொன்னால் அது மிகை அல்ல. நாமும் கூறுவோம் தமிழ்நாடு வாழ்க! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## கார்ப்பரேட் வரலாற்றின் மாபெரும் மோசடி

அதானி நிறுவனம் செய்திருக்கும் மோசடி குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த ஹின்டண்பர்க் நிறுவனம் அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு கால ஆய்வின் முடிவாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

விளக்கிச் சொன்னாலும் எளிதில் புரிய வைக்க முடியாத அளவிற்கு இதில் மோசடி நடைபெற்றிருக்கிறது. ஆனால் இதைப் பற்றிய செய்தியே வெகுமக்களிடம் சென்று சேரவில்லை. பங்குச்சந்தை தொடர்பான அனைத்து நிறுவனங்களிலும் உயர் பதவிகளில் அமர்ந்திருக்கக் கூடிய பார்ப்பன அதிகாரிகள், கார்ப்பரேட் நிறுவனங்களின் நிதி, மேலாண்மை, நிர்வாகப் பொறுப்புகளில் அமர்ந்திருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும் சேர்ந்து செய்திருக்கக்கூடிய, பல லட்சம் கோடி மோசடியே இந்த அதானி நிறுவன மோசடி ஆகும். பங்குச்சந்தையின் மூலம் 819%நிதி வளர்ச்சியை அதானி நிறுவனம் பெற்றிருக்கிறது.

இந்த இமாலய மோசடியை இந்தியாவிற்குள் இருக்கும் யாரும் வெளிக்கொண்டுவராதபடி பார்ப்பன லாபி செயல்படுகிறது. இவர்களை அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் தற்போது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இவர்களின் மிரட்டலுக்கு அஞ்சாமல் சட்டப்படியாக அதானி நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகளைச் சந்திக்கத் தயார் என்று சவால் விட்டிருக்கிறது ஹின்டண்பர்க் நிறுவனம்.

அதானி நிறுவனத்தில் தேசிய வங்கியான ஸ்டேட் பாங்க்கும், எல்.அய்.சியும் முதலீடு செய்திருக்கின்றன. ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியான பின்னர், அதானி நிறுவனத்தின் பங்குச் சந்தை மதிப்பு சரியத் தொடங்கியது. இவ்வளவு நடந்த பின்னும், இழப்புகளைச் சந்தித்த பின்னும் எல்.அய்.சி மீண்டும் ரூபாய் 70,000 கோடி அளவிற்கு அதானி நிறுவனத்தில் முதலீடு செய்திருக்கிறதென்றால், யாரால் என்ன செய்துவிட முடியும் என்கிற பார்ப்பனியத் திமிரை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். உலகின் மூன்றாவது பணக்காரராக விளங்கும் அதானியின் இந்த சொத்துக்குவிப்பு இவ்வளவு ஊழல்களையும் மோசடியையும் உள்ளடக்கி இருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளாக பார்ப்பனியத்தின் பின்னணியில் செயல்படும் ஒன்றிய அரசுடன் அதானி கொண்டிருக்கும் கள்ளக் கூட்டணியே இந்த மோசடிக்கு அடித்தளமாகும்.

உலக அளவிலான இந்த மாபெரும் பங்குச்சந்தை ஊழல் இந்தியாவிற்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது. "2ஜி ஊழல்" என்ற ஒன்றுமில்லாத ஒன்றை ஊதிப் பெரிதாக்கி, ஒட்டுமொத்த நாட்டையும் ஒரே நாளில் திமுகவிற்கு எதிராக திருப்பினார்கள் பார்ப்பனர்கள். இந்திய அரசின் அனைத்து உயர்பதவிகளிலும் கோலோச்சிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களின் ஊழல்களுள் ஒன்று உலக கார்ப்பரேட் வரலாற்றின் பெரும் ஊழலாக உருவெடுத்திருக்கிறது இன்று.




ஆ. இராசா MP
துணைப் பொதுச் செயலாளர் - தி.மு.க

சுப.வீரபாண்டியன்
பொதுச் செயலாளர் - திராவிட இயக்கத் தமிழர் பேரவை

ER. ஈஸ்வரன் MLA.,
கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி

இரா. அதியமான்
ஆதித் தமிழர் பேரவை

உ. தனியரசு Ex MLA.,
தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை

சி. வெண்மணி
திராவிடர் தமிழர் கட்சி

சமூகநீதி ஆய்வாளர்கள்
சமுதாயத் தலைவர்கள்
சிறப்புரையாற்றுகிறார்கள்

அனைவரும் வருக!

திராவிட இயக்கத் தமிழர் பேரவை
மேற்கு மண்டலம்

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 17ஆம் ஆண்டு தொடக்க விழா







திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 17ஆம் ஆண்டு தொடக்க விழா தேனாம்பேட்டை அன்பகத்தில் 22.01.2023 அன்று நடைபெற்றது. எழுத்தாளர் ஓவியா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்ச்சியில் எழுத்தாளர் ஓவியா மொழிபெயர்த்த "மதத்திற்கும் அறிவியலுக்குமான மோதலின் வரலாறு" (ஜான் வில்லியம் டிரேப்பர்), தோழர் வெற்றிச்செல்வன் எழுதிய "திராவிடம் - அரசியலும் அவதூறும்", தோழர் சாரதா தேவி எழுதிய "புல்டோசர் அரசியல்" ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.






Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian